வடக்கு - கிழக்கு மாகாணம்

# தமிழ் இலக்கிய விழா – 1999

ஒக்டோபர் 15, 16, 17



## ஆளுநர் விருது பெறுவோர்

01. வையாளி ஆனைக்குட்டி.
02. பண்டிதர் இ. வடிவேல்.
03. தி. ச. வரதராஜன்.
04. டொமினிக் ஜீவா.
05. பா. நாகமணிப்போடி.
06. க. இராஜரெட்ணம்.
07. வி. எம். இஸ்மாயில்.
08. ந. பாலேஸ்வரி.
09. க. சொக்கலிங்கம்.
10. என். கே. பத்மநாதன்.
11. வி. சுப்பிரமணியம்.
12. பேராசிரியர் சி. தில்லைநாதன்.
13. இ. முருகையன்.
14. சி. கிருஷ்ணபிள்ளை.
15. ஜனாபா. மீரா உம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**சுந்தரம் டிவகலாலா**

செயலாளர்

**கல்வி,**

**பண்பாட்டலுவல்கள்,**

**விளையாட்டுத்துறை அமைச்சு,**

**வடக்கு கிழக்கு மாகாணம்,**

**திருகோணமலை.**

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் இலக்கியப் பெருவிழாவை கோலாகலமாகவும், உணர்வு பூர்வமாகவும் கொண்டாடிக்கொண்டிருக்கின்ற இந்த நன்னாளில், எமது மண்ணில் பல்வேறுப் சாதனைகளை புரிந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற அறிஞர்கள், கலைஞர்கள், படைப்பாளிகளுள் பதினைந்து மாமனிதர்களைக் கௌரவித்து பெருமையடையும் பேற்றினை எமது வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சு பெற்றுள்ளது.

இன்று.......!

விரக்தியின் விளிம்பில் வாழ்கின்ற மக்களின் மன உணர்வுகளை புரிந்து கொண்டு, அவர்களுக்காகவே இலக்கியம் படைக்கின்றவர்களில் எத்தனை பேரை கௌரவிக்க வேண்டும்.......?

நலிந்து போன சமூகத்தின் இளம் சந்ததிக்கு கல்வி ஒளி ஊட்டி அவர்களை ஏற்றம் பெற வைக்கும் கல்விமான்களில் எத்தனைபேரைக் கௌரவிக்கவேண்டும்....?

மனித மனத்தின் மெல்லிய உணர்வுகளைத் தத்ரூபமான ஓவியங்களாகவும், சிற்பங்களாகவும் படைத்துப் பெருமை கொள்ளும் ஓவியர்கள், சிற்பிகளில் எத்தனை பேரைக் கௌரவிக்க வேண்டும்....?

பண்டைத்தமிழர் கலை, பண்பாட்டுப் பாரம் பரியங்களை அழிந்து விடாது காத்து அதன் பெருமைகளை உலகிற்குப் பரப்பி வருவதுடன், அவற்றுக்கென்றே புதியதொரு பரம்பரையை உருவாக்கவும் உழைத்து வரும் கலைஞர்களில் எத்தனைபேரைக் கௌரவிக்க வேண்டும்.....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எத்தனையோ பிற அழுத்தங்களின் மத்தியிலும் சளைக்காது, கொண்ட இலட்சியத்தை நிலைநாட்டும் குறிக்கோளுடன் ஆக்கபூர்வமான சஞ்சிகைகளையும், படைப்பிலக்கிய வெளியீடுகளையும் வெளியிட்டு வரும், சிருஷ்டி கர்த்தாக்களில் எத்தனை பேரைக் கௌரவிக்கவேண்டும்.....?

இப்படி மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் பணிபுரியும் நூற்றுக்கணக்கான அறிஞர் பெருமக்களையும், கலைஞர்களையும், சிருஷ்டிகர்த்தாக்களையும் கௌரவித்துப் பெருமை கொள்ள வேண்டுமென்ற நோக்கில் இந்தத் திட்டத்தை எமது அமைச்சு செயல்படுத்தி வருகின்றது.

அதற்கமைய வருடாவருடம் நடத்தப்பட்டு வரும் இலக்கியப் பெருவிழாவில் அவர்களில் பதினைந்து பெருமக்களை, கௌரவிக்கும் வகையில் "வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் விருது" வழங்கப்படுகின்றது.

அதே வேளை, ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்பட்டுவரும் ஆக்க இலக்கிய முயற்சிகளில், சிறந்த படைப்புக்களைத் தெரிவு செய்து அவற்றின் படைப்பாளிகளைக் கௌரவிக்கும் வகையிலும் "வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விருதுகள்" வழங்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் புலவர்களையும், கலைஞர்களையும், அறிஞர்களையும் கௌரவித்து விழா எடுக்கும் மரபு, சங்க காலத்தில் இருந்தே தமிழ்ப் பண்பாட்டுடன் இணைந்து விட்ட ஒன்று....... அது இந்த மண்ணில் என்றும் தொடர வேண்டுமென்ற அகன்ற நோக்கில், எமது அமைச்சு செயல்பட்டு வருகின்றது... அப்பொழுது, மேலும், மேலும் ஆற்றலும், வினைத்திறனும் உள்ள இளம் அறிஞர்களையும், கலைஞர்களையும் இந்த மண் தோற்றுவிக்கும்.....அவை எமது இலக்கிய கலைவளத்தை மேலும் செழுமைப்படுத்தும்.

இன்று நடைபெறும் இலக்கிய பெருவிழாவில் “1999ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது” பெறும் அறிஞர்களையும், “1999ஆம் ஆண்டுக்கான வடக்கு - கிழக்கு மாகாண இலக்கிய விருது” பெறும் படைப்பாளிகளையும் பெருமையுடன் வாழ்த்துகிறேன்... அவர்கள் மேலும் பல, பல ஆண்டுகள் நலமே வாழ்ந்து, தமது பணிகளை இந்த மண்ணுக்கும், மக்களுக்கும் வழங்க வேண்டுமென்றும் பிரார்த்திக் கின்றேன்!

இந்த முயற்சியில் என்னோடு தோள் கொடுத்து உழைத்துவரும் அன்பு நெஞ்சங்களை நன்றியுடன் நினைவு கூறி, இந்த இலக்கிய விழா சிறப்புடன் நடந்தேற வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்தப்படுவோர்



## ஆளுநர் விருது பெறுவோர் – 1999

01. கலாபூஷணம் வையாளி ஆனைக்குட்டி
02. பண்டிதர், சைவப்புலவர் இ. வடிவேல்
03. தி. ச. வரதராசர் (வரதர்)
04. டொமினிக் ஜீவா
05. கலாபூஷணம் நாகமணிப்போடி
06. சித்திரக்கலை மாதவி க. இராசரத்தினம்
07. மருதூர்க் கொத்தன் வி. எம். இஸ்மாயில்
08. தமிழ்மணி ந. பாலேஸ்வரி
09. வித்துவான் க. சொக்கலிங்கம்
10. கலாசூரி என். கே. பத்மநாதன்
11. தமிழ்மணி வே. சுப்பிரமணியம்
12. பேராசிரியர் சி. தில்லைநாதன்
13. இ. முருகையன்
14. சி. கிருஷ்ணபிள்ளை
15. இசைக்குயில் மீரா உம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம்

**வையாளி**

**ஆனைக்குட்டி**

V

**※ பறைமேளக்கலை**

**※ வைத்தியம்**

[redacted]

'யாழ்நூல் வித்தகர்' சுவாமி விபுலானந்தர் அவதரித்த மட்டக்களப்பு மாவட்டம் இன்றும் இசைக்கும், நாட்டார் இசைக்கும், பண்டைத் தமிழரின் கலை வடிவங்களுக்கும் பேரூற்றாக விளங்கி வருகின்றது.

சங்கத் தமிழரின் உன்னத தமிழ் வாத்தியமான பறை மேளக் கலைக்குப் புதுமெருகு கொடுத்துவரும் திரு.வையாளி ஆனைக்குட்டி அவர்கள் களுதாவளையைப் பிறப்பிடமாக் கொண்டவர்.

1917 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தின் களுதாவளையில் பிறந்த வையாளி ஆனைக்குட்டி அவர்கள் சிறு வயது முதல் பறைமேளக் கலையில் ஆர்வம் கொண்டு அதனை முறைப்படி கற்று வந்தார். தவில், நாதஸ்வரம், மிருதங்கம் போன்ற கீழைத்தேய வாத்தியங்களுக்குத்தான் தனி ஆவர்த்தன நிகழ்ச்சி வைக்க முடியும் என்ற மரபை மாற்றி பறைமேள வாசிப்பையும் மட்டக்களப்பில் பல்வேறு இடங்களிலும் தனி நிகழ்ச்சியாக நடத்திக் காட்டி அதற்கென ஒரு சுவைஞர் கூட்டத்தை உருவாக்கிப் புகழ்பெற்ற கலைஞர்தான் வையாளி ஆனைக்குட்டி அவர்கள்.

களுதாவளைக் கிராமத்து இளைஞர்களுக்கு, இக்கலையில் பயிற்சிகள் கொடுத்து அதனை அழிந்து போக விடாது காத்துவரும் வையாளி ஆனைக்குட்டி அவர்களுக்கு பறைமேளக் கலைப் பணிக்காக முதன் முதலில் இலங்கை கலாச்சார அமைச்சு "கலாபூஷணம்" விருது வழங்கிப் பெருமையடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையாளி ஆனைக்குட்டி அவர்கள் பறைமேளக் கலையில் மட்டுமல்லாது, வைத்தியம், மாந்திரீகம் என்ற பல்வேறு துறைகளிலும் பெயர் பெற்று விளங்குபவர்.

தனது பிரதேசத்தில் குணமாக்க முடியாத பல்வேறு நோய்களையெல்லாம் தன் அனுபவத்தால் குணமாக்கியதுடன், மக்களின் அன்பைப் பெற்றவர்.

பறைமேளக் கலையின் நுட்பங்களையும் அதனைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களையும், மங்கள அமங்கல நிகழ்ச்சிகளில் எவ்வாறு இசைக்க வேண்டும் என்ற நுட்பங்களையும் வாய்வழியாகக் கூறிவரும் 'கலாபூஷணம்' வையாளி ஆனைக்குட்டி அவர்களின் கலைத்துறை அனுபவங்களை நூல் வடிவில் கொண்டு வரவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை நல்லதொரு பணியாகும்.

பண்டைத் தமிழர் கலைவடிவங்களில் ஒன்றான "பறைமேளக் கலைக்குப்" புத்துயிர் அளித்து அதனை ஜனரஞ்சகப்படுத்தி வரும் கலாபூஷணம் வையாளி ஆனைக்குட்டி அவர்களைக் கௌரவிக்கும் முகமாக 1999ஆம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது.

[redacted]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர்

சைவப்புலவர்

# இ. வடிவேல்

V

- வரலாற்று ஆய்வு
- கவிதை
- கட்டுரை
- கல்வித்துறை
- சமய இலக்கியம்

**1919** ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி மீன்பாடும் தேனாடு என்று அழைகக்ப்படும், தமிழ் வளர்த்துப் பெருமை சேர்க்கும் மட்டக்களப்பில் பிறந்த இ.வடிவேல் அவர்கள் தனது 26 ஆவது வயதில் ஆசிரியப் பணிக்காக, முத்துக்கள் நித்திலம் கொழிக்கும் பெருமை சேர் திருகோணமலைக்கு வந்தார்.

1942ஆம் ஆண்டில் தமிழ் ஆசிரியராகக் கல்வி உலகில் அடியெடுத்து வைத்த இ.வடிவேல் அவர்கள் 1950இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தினால் நடத்தப்பட்ட 'பண்டிதர்' பரீட்சையில் சித்தி அடைந்ததைத் தொடர்ந்து உயர்தர வகுப்புக்களில் தமிழ் பாடத்தை கற்பிப்பதற்கு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி நடராஜானந்த அவர்களின் விருப்பத்தின் பேரில் திருகோணமலை இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டார்.

1952ஆம் ஆண்டில் சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 'சைவப்புலவர்' தேர்விலும் சித்தி பெற்று பண்டிதர் ஆகவும், சைவப்புலவராகவும் தகுதி பெற்ற சிறந்த ஆசானாகத் தமிழையும் சைவத்தையும் சிறப்புறக் கற்பித்து வந்தார். இக்காலப் பகுதியில் இந்துக் கல்லூரியில் சேவையாற்றி வந்த போதே 1953இல் ஆரம்ப வகுப்பிற்கான 'தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வும் பெற்றார்

பண்டிதர் அவர்கள் கல்வித் துறையிலும் வரலாறுகளை ஆவணப்படுத்து வதிலும் இசைப் பேருரைகளை நயம்பட உரைப்பதிலும் ஆய்வுகளை மேற்கொள்வ திலும் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக உழைத்து வருகின்றார்.

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் புகழ் பெற்ற பாடசாலைக் கீதத்தை யாத்து பல்லாயிரக்கணக்கான மாணவ உள்ளங்களில் பதியச் செய்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினதும் சைவத்தினதும் தொன்மை விளங்கப் பல்வேறு ஆய்வு நூல்களையும் தமிழ் கூறும் நல்லுலகுக்கு அளித்துள்ளார். அவர் ஆய்வு செய்து ஆக்கிய நூல்களுள் "திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள்", "திருகோணமலை கோணேசர் கோயில் வரலாறு", "திருக்கோணேஸ்வரம் - தொன்மையும் வண்மையும்" ஆகியன குறிப்பிடத் தகுந்த வரலாற்று ஆவணங்களாகும். "சண்முகா சரணம்", "திருமுறை பண்ணிசைத் திறனாய்வு", "சுவாமி விவேகானந்தரின் ஞானக்குரல்" ஆகிய நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவற்றைவிட பண்டைய சுவடிகளில் இருந்தும் கல்வெட்டிலிருந்தும் "கோணமலை அந்தாதி" "கோணேசர் கல்வெட்டு" ஆகிய பழம்பெரும் நூல்களை பதிப்பாசிரியராக இருந்து அவர் வெளியிட்டு அவற்றை அழிவுகளில் இருந்தும் காத்து இந்த மண்ணுக்குப் படைத்துள்ளார்.



இவர் சமய, சமூக, தமிழ்ப் பணிகளுக்காக பல்வேறு பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். 1958இல் காஞ்சி ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகளால் "சைவசித்தாந்த சிகாமணி", 1980இல் இந்து சமய கலாச்சார அமைச்சினால் "கதாப்பிரசங்க வாரிதி", 1982இல் திருப்பனந்தாள் ஆதீன ஸ்ரீ முத்துக் கந்தசுவாமி தேசிகரினால் "திருமுறைச் செல்வர்", 1993இல் இந்துக் கலாசார அமைச்சினால் "ஞானசிரோன்மணி", 1993இல் திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீன கர்த்தாவால் "கலைமாமணி" ஆகிய பட்டங்களுமாக வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டவர்

கடந்த 50 ஆண்டுகளாக தமிழுக்கும் சைவத்துக்கும் இலக்கியத்துறைக்கும் அவர் ஆற்றிவரும் பணிகளுக்காக 1999ஆம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி. ச. வரதராசர்
## (வரதர்)

V

* சிறுகதை
* நாவல்
* குழந்தை இலக்கியம்
* சஞ்சிகை

'வரதர், "திசவ" ஆகிய புனைப்பெயர்களில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இலக்கியப் பணி புரிந்து வரும் தி. ச. வரதராசன் ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்கின்றார்.

1943 களில் தமிழிலக்கிய மறுமலர்ச்சி இயக்கத்தின் ஆரம்பக் கர்த்தாக்களில் ஒருவராக இருந்த வரதர், "மறுமலர்ச்சி" என்ற கையெழுத்துச் சஞ்சிகையின் இணை ஆசிரியராக அமரர் அ. செ. முருகானந்தம் அவர்களுடன் இணைந்து ஒரு சிறந்த இலக்கிய கர்த்தாவாக அறிமுகமாகினார். அதுவே, பின்னர் "மறுமலர்ச்சி" என்ற பெயரிலான சஞ்சிகையாகத் தோற்றம் பெற்று ஈழத்துப் புனைகதை இலக்கியத் துறையில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது. இதன் மூலம் ஈழத்து சிறுகதைக்கென ஒரு வரலாற்றுப் பாரம்பரியத்தை தோற்றுவித்தது.

மறுமலர்ச்சிச் சஞ்சிகையைத் தக்கவாறு பயன்படுத்தித் தனது படைப்புக் களைத் தந்தவர் வரதராவார். இச்சஞ்சிகையில் சிறுகதைகளுடன், மூன்று குறுநாவல் களையும் இவர் எழுதியுள்ளார். கற்பு, வீரம், வெறி என்பன இவரது கதைகளுள் மிகச் சிறந்த, காலத்தால் அழியாத சிறுகதைகளாகும். 'கயமை மயக்கம் ' என்ற பெயரில் இவரது சிறுகதைகள் தொகுதியாக வெளிவந்துள்ளது. இத்தொகுதி பின்னர் "வரதர் கதைகள்" என்ற பெயரில் தமிழ்நாட்டில் வெளியிடப்பட்டது. இவர் எழுதி வெளியிட்ட மலரும் நினைவுகள் ( தீ வாத்தியார்) புனைகதை சாராத் துறையில் மிகச் சிறந்த ஒரு ஆக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1965 - 1967 காலப் பகுதியில் 'புதினம்' என்ற சஞ்சிகையைத் தானே நடாத்தி வந்ததன் மூலமும், பல புதிய எழுத்துப் பரம்பரையை தமிழ் இலக்கிய உலக்கு வழங்கியவர். நீண்ட இடைவெளியின் பின்னர் மாணவர்களின் வாசிப்புத் திறனையும், உலக அறிவையும், ஓங்கச் செய்யும் நோக்கில் "அறிவுக்களஞ்சியம" என்ற சஞ்சிகையை வெளியிட்டு வந்தார்.அவரது பாரதக் கதை தமிழ் இலக்கியத் துறைக்கு அளிக்கப்பட்ட இன்னொரு வரப்பிரசாதமாகும்.

"வரதர்வெளியீடு" என்ற பெயரில் சிறுவர்களுக்கான பல நூல்களை வெளியிட்டு வைத்துள்ள வரதர், தனது 50 ஆண்டுகளுக்கும் மேலான இலக்கியப் பணியில் சிறுகதை ஆசிரியராகவும், விமர்சனவியலாளராகவும், பத்திரிகையாளராகவும், வெளியீட்டாளராகவும் இருந்து பல புதிய ஆக்கங்களையும், புதிய எழுத்தாளர் களையும் உருவாக்கியவர்.

வரதரின் அரை நூற்றாண்டுக்கும் மேலான இலக்கியப் பணியையும், சஞ்சிகை வெளியீட்டுப் பணியையும் கௌரவிக்குமுகமாக 1999 ஆம் ஆண்டுக்கான மாகாண ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொமினிக் ஜீவா

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு ஏழைத் தொழிலாளியின் மகனாக 1927ம் ஆண்டு ஜூன் மாதம் பிறந்த டொமினிக் ஜீவா கடந்த அரைநூற்றாண்டுகளுக்கு மேலாக பல நெருக்கடிகள், சோதனைகளின் மத்தியிலும் இலக்கியப் பணியை ஆற்றி வருகின்றார்.

சிறுகதை ஆசிரியராகவும், விமர்சனவியலாளராகவும் சமூக சீர்திருத்தவாதியாகவும், பத்திரிகையாளராகவும் முற்போக்கு பாசறையில் புடம்போட்டு வளர்த் தெடுக்கப் பட்ட ஜீவாவின் படைப்புக்கள் இன்று இலங்கையில் மட்டுமல்லாது தமிழகத்திலும் ஒரு முத்திரையைப் பொறித்துக் கொண்டிருக்கின்றன.

இவரது "தண்ணீரும் கண்ணீரும்" சிறுகதைத் தொகுதி ஸ்ரீலங்கா சாகித்தியப் பரிசை பெற்றதுடன் இந்தியாவின் தலை சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்கான உப பாடநூலாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை, இவரது இலக்கிய எழுச்சியை எடுத்துக் காட்டுகின்றது.

இவரது ஏனைய சிறுகதைத் தொகுதிகளான "பாதுகை", "சாலையின் திருப்பங்கள்", "வாழ்வின் தரிசனங்கள்" போன்றவை சமுகத்தின் நலிந்து போன மக்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் படைப்புக்களாகும். இவற்றை விட இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களான பேட்டிகள், விமர்சனங்கள், அனுபவ முத்திரைகள், ஆசிரியத் தலையங்கங்கள், கேள்வி பதில்கள் போன்றவற்றின் மூலம் ஆழமான கருத்துக்கள், தமிழ் இலக்கிய சுவைஞர்களைச் சென்றடைவதற்காக பத்துக்கும்

V

- ※ சிறுகதை
- ※ நாவல்
- ※ விமர்சனம்
- ※ சஞ்சிகை
- ※ முற்போக்கு இலக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது தெரிந்தெடுத்த சிறுகதைகளைக் கொண்ட "பத்தரே பிரசூத்திய" என்ற தொகுதி சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு சிங்கள வாசகர்கள் மத்தியிலும் இவரைப் பிரபல்யப்படுத்தியுள்ளது. இவரது பல சிறுகதைகள் ஆங்கிலத்திலும் ரஷ்ய, செக் மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.



இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தது போன்று 1966ஆம் ஆண்டில் இருந்து 34 வருடங்களாக தனியொருவனாக நின்று "மல்லிகை"என்ற கலை இலக்கிய முற்போக்கு இதழை வெளியிட்டு வருவது இவரது பெரும் சாதனையாகும்.கலை இலக்கியத்துறையில் பல புதிய எழுத்தாளர்களைஅறிமுகம் செய்த பெருமையும், ஜீவாவையே சாரும்.

இவரது வாழ்க்கையின் துயரங்களையும், சாதனைகளையும், தோல்விகளையும், வெற்றிகளையும் எடுத்துக்கூறும் சுயசரிதை நூலாக "எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரங்கள்" என்ற நூல் இலங்கையில் அச்சிடப்பட்டு, சென்னையில் பல அறிஞர்கள் முன்னிலையில் வெளியிடப்பட்டது. இவரது இலக்கிய வேள்வியின் இன்னொரு சாதனையாகும்.

பல்கலைக்கழகப் படி ஏறாது இன்று, இலங்கை, இந்தியப் பல்கலைக்கழகங்களில் எல்லாம் கருத்துரை வழங்கும் அளவுக்கு உயர்ந்து நிற்கும் டொமினிக் ஜீவாவின் அரை நூற்றாண்டு கால இலக்கிய சமூகப் பணிக்காக அவரைக் கௌரவிக்குமுகமாக 1999ம் ஆண்டின் வடக்கு கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம் பாலசுப்போடி நாகமணிப்போடி

- வடமோடிக் கூத்து
- தென்மோடிக் கூத்து
- இசைக்கருவி ஆக்கம்
- பிரதியாக்கம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கன்னன் குடாவில் 1927இல் பிறந்த திரு. பா. நாகமணிப்போடி, இன்று தனது 72வது வயதைப் பூர்த்திசெய்து சாளம்பக்கேணியில் வசித்து வருகின்றார்.

கிழக்கிலங்கையில், குறிப்பாக மட்டக்களப்பு, பாரம்பரிய கலை வடிவமாக விளங்கி வரும் 'கூத்துக்கலை' க்குப் பெயர் பெற்று விளங்குகின்றது. கலைஞர் பா. நாகமணிப்போடி கூத்துக்கலைவடிவத்தின் இரு பெரும் பிரிவுகளான வடமோடி, தென்மோடி ஆகிய இரண்டிலுமே துறைபோனவர் என்பதற்கு, அவர் இதுவரை நடித்துக்காட்டிய கூத்துக்கள் சான்று பகர்கின்றன.

இவர் ஐம்பதுக்கு மேற்பட்ட கூத்துக்களின் பிரதிகளை எழுதி, அவற்றை இளங்கலைஞர்களுக்குப் பழக்கி அரங்கேற்றியதுடன், அக்கலைகளினூடாக இன்று நூற்றுக்கும் மேற்பட்ட கூத்துக் கலைஞர்களையும், பல அண்ணாவிமார்களையும் உருவாக்கி தமிழுக்குப் பெரும் சேவையாற்றியுள்ளார்

மட்டக்களப்பில் பெரும் செல்வாக்குடன் வாழ்ந்த பிரபல அண்ணாவியாரான 'சீனியர்' எனப்படும் வலையிறவு சீனித்தம்பி அண்ணாவியாரைக் குருவாக ஏற்று முறைப்படி நாட்டுக்கூத்து கலையைப் பயின்று, மட்டக்களப்பின் ஒரு சில பிரபலமான அண்ணாவி மார்களில் இவரும் ஒருவராகத் திகழ்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தளம் செய்வது, புதிது புதிதாக கூத்துப்பிரதிகள் எழுதுதல் என்பன இவரது விசேட ஆற்றல்களாகும்.

கூத்துக்கலையில் இவர் ஆற்றிவரும் பணிக்காக, கலாச்சார அமைச்சு கலா பூஷணம் விருது வழங்கிக் கௌரவித்தது.



கலாபூஷணம் பாலசுப்போடி நாகமணிப்போடி அவர்களின் ஐம்பது ஆண்டு காலத்துக்கும் மேற்பட்ட காலமாக கூத்துக்கலைக்கும் கூத்துப்பிரதியாக்கத்திற்கும் ஆற்றிவரும் பணிக்காக 1999ஆம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர் விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சித்திரக்கலை மாமணி'

# க. இராசரத்தினம்

V

❋ ஓவியம்
❋ கலைத்துறை
❋ வானொலி தொழில் நுட்பம்

1927ம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள காரை நகரில் பிறந்த க. இராசரத்தினம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியைக் காரைநகரிலும், இடைநிலைக் கல்வியை யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்து, இயல்பாகவே ஏற்பட்ட சித்திரக்கலையின் ஆர்வம் காரணமாக சென்னையில் உள்ள சித்திரக் கல்லூரியில் இரண்டு வருடப் பயிற்சியைப் பெற்றவர்.

சித்திரப் பயிற்சியை முறையாகக் கற்றுக் கொண்ட க. இராசரத்தினம் ஆசிரியராக நியமனம் பெற்று அச்சுவேலி மகா வித்தியாலயம், காரை நகர் இந்துக்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகியவற்றில் பணிபுரிந்து வந்தார். ஆசிரியராக இருக்கும் காலங்களில் சித்திரப்பாடத்தில் மாணவர் விருப்புடன் கற்பதற்கேற்ற ஒரு உந்து சக்தியாகத் தொழிற்பட்டவர்.

இவர் பின்னர், திருகோணமலை சித்திரப்பாட வட்டாரக்கல்வி அதிகாரியாகவும், கல்வி அதிகாரியாகவும் பதவி உயர்வுகள் பெற்றுச் சேவையாற்றி இளைப்பாறினார். தனது சேவைக்காலத்தில் புத்தக வெளியீட்டுத் திணைக்களத்தில் பணியாற்றி பாட நூல்களுக்கு ஓவியங்கள் வரைந்து கொடுப்பதிலும் பாடத்திட்டங்கள் தயாரித்துக் கொடுப்பதிலும் ஈடுபட்டார்.

இவர் ஓவியக்கலையை வளர்க்கும் அதே நேரத்தில் இயல்பாகவே வானொலி பொருத்தும் தொழில்நுட்பத் திறன் கொண்டவர் பேராசிரியர் கைலாசபதியின் உருவப்படத்தை தத்ரூபமாக வரைந்தமைக்காக, மானிப்பாய் இந்துச் சமூகம் இவருக்கு பொன்னாடை போர்த்தி 'சித்திரக்கலை மாமணி' என்னும் பட்டம் வழங்கி கௌரவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது மனைவி திருமதி இராசம்மா அவர்கள் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்த போதும் இவரது சித்திரக்கலை விருத்திக்கு வேண்டிய ஊக்குவிப்பையும் உற்சாகத்தையும் கொடுத்து வருவதாலேயே ஒரு தலை சிறந்த ஓவியராக இவரால் பிரகாசிக்க முடிந்தது.



தனது சித்திரக்கலை ஆற்றலை தனது மருமக்களுக்குப் பயிற்றுவித்து அவர் களைத் தனது வாரிசுக்களாக உருவாக்கி வருகின்றார். இவரிடம் ஓவியம் கற்ற மாணவர் பரம்பரை இன்றும் யாழ்ப்பாணத்தில் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது. இவரால் தயாரிக்கப்பட்ட சித்திரக்கலை நுட்பங்கள் தொடர்பான அரிய தகவல்கள் அடங்கிய 'பிரதிமை ஓவியங்கள்' என்ற நூல் வடக்கு கிழக்கு மாகாண கல்விப்பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

'சித்திரக்கலை மாமணி' திரு. க. இராசரத்தினம் அவர்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஓவியக்கலை அபிவிருத்தி தொடர்பாக மேற்கொண்டு வரும் பணிக்காக 1999 ஆம் ஆண்டின் வடக்கு கிழக்கு ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மருதூர் கொத்தன்)

# வி. எம். இஸ்மாயில்

V

※ சிறுகதை

※ இஸ்லாமிய இயக்கம்

※ கல்வித்துறை

"எழுத்தாளன் ஒருவன் தான் வாழும் சமூகத்தில் தோன்றும் இடர்பாடுகளினால் உந்தப்படுவதன் விளைவாகவே அவன் எழுத ஆரம்பிக்கின்றான். அவனது உள்ளத்தில் தோன்றும் கொந்தளிப்பினால் ஏற்படும் உணர்வு நிலைகள் அவனுடைய படைப்புக்களை வெளிச்சமாக்கி வருகின்றன."

மல்லிகையின் அட்டைப்பட ஓவியமாக மருதூர் கொத்தன் கௌரவிக்கப்பட்ட போது க. நவம் அவர்களின் கருத்துக்கள் மூலமாக மருதூர் கொத்தனின் பார்வை சமூகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டது.

ஆம்!..... அம்பாறை மாவட்டத்தின் இலக்கிய வளம் கொழிக்கும் மருதமுனை, தமிழ் இலக்கிய உலகிற்கு படைத்த ஒரு சிற்பிதான் ஜனாப். வி. எம். இஸ்மாயில் மூத்த தமிழ் ஆசானாகவும், அதிபராகவும் இருந்து இஸ்லாமிய, தமிழ் இலக்கிய துறைக்கும், புனை கதை இலக்கியத்துக்கும் அவர் ஆற்றி வரும் பணி அளப்பரியது.

மருதூர் கொத்தனின் பல்வேறு படைப்புக்கள் ஈழத்துப் பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும், தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் 'தாமரை' போன்ற இலக்கிய சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. பயனுள்ள சமூக மாறுதல்களையும், வேண்டிநிற்கும் இலக்கியங்களைப் படைக்கும் ஜனாப் வி. எம். இஸ்மாயில் அவர்களின் சிறுகதைகளில் வர்க்க வேறு பாட்டையும் நிலமானியத்தையும் சமூக விஞ்ஞான ரீதியில் அணுகி அவற்றைக் களைந்துவிடத்துடிக்கும் துடிப்பு அவரின் சிறுகதைகளில் பிரதிபலிக்கின்றது. அதன் விளைவாக சமூகத்தில் தேங்கிக்கிடக்கும் சுரண்டல்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாற்றுக்களையும் துணிச்சலுடன் வெளிக்காட்டும் இலக்கியங்களைப் படைத்துள்ளார். அவருடைய பல கதைகளில் "கோடரிகள் கூராகின்றன" என்ற சிறுகதை பல ஆயிரக்கணக்கான வாசகர்களின் நெஞ்சைத் தொட்ட உணர்வு பூர்வமான ஒரு சிறுகதை.

தமிழ் இலக்கியத் துறையில் பல தமிழ் இலக்கிய இஸ்லாமிய படைப்புக்களை படைத்துப் பணிசெய்து வருவதற்காக மருதூர் கொத்தன் ஜனாப் வி. எம். இஸ்மாயில் அவர்களை கௌரவிக்கும் முகமாக 1999 ஆம் ஆண்டுக்கான வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி
## ந. பாலேஸ்வரி

V

- ❋ நாவல்
- ❋ சிறுகதை
- ❋ கவிதை
- ❋ கல்வித்துறை
- ❋ நாட்டார் இலக்கியம்
- ❋ ஓவியம்

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட மூத்த பெண் எழுத்தாளரான தமிழ்மணி ந. பாலேஸ்வரி அவர்கள் இலக்கிய உலகிற்கு புதியவரல்ல இதுவரை நூற்றுக்கும் அதிகமான சிறுகதைகளையும், பன்னிரண்டு நாவல்களையும், எழுதியுள்ளதுடன் பல சமய, சமூக கட்டுரைகளையும், எழுதியுள்ளார்.

1972இல் வீரகேசரி பிரசுரமாக வெளிவந்த 'பூசைக்கு வந்த மலர்' நாவல் விற்பனையில் சாதனை படைத்ததுடன் 20 ஆண்டுகளின் பின் மீண்டும் மித்திரன் வாரமலரில் தொடராக வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

1992இல் இந்து சமயகலாசார அலுவல்கள் அமைச்சினால் 'தமிழ்மணி' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். கிழக்கு மாகாணத்தில் இவ்வாறு கௌரவிக்கப்பட்ட ஒரே பெண் இவராவார். 1996இல் மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையில் பொன்விழாவில் முத்தமிழ் மன்றத்தினரால் 'சிறுகதைச்சிற்பி' என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்ப்டார்.

இவரது 'எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு' என்ற நாவல் தமிழ் நாட்டில் அச்சிடப்பட்டு தமிழ் எழுத்தாளர் நலநிதி அறக்கட்டளை நிறுவனத்தினரால் அண்ணாநகரில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இவற்றைவிட சுடர்விளக்கு, உறவுக்கு அப்பால், கோவும் கோயிலும், தத்தை விடு தூது போன்ற சிறந்த நாவல்கள் உட்பட 14 நாவல்களை எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை டைக்வீதியில் வாழ்ந்து வரும் இவர், பல்வேறு சமூக, சமய பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார். திருகோணமலை மகளிர் நலன்புரி மன்றத்தின் செயலாளராகவும், தெட்சணகானசபா செல்வி பா. இராஜேஸ்வரி ஞாபகார்த்த கலாநிலையத்தின் தலைவராகவும் இருந்து பல பணிகளை ஆற்றி வரும் இவர் ஓர் இளைப்பாறிய பிரதி அதிபராவார்.



இன்றும் இவரது எழுத்துப்பணியும், சமூகப்பணியும் தொடர்கின்றது.

தமிழ்மணி ந. பாலேஸ்வரியின் 40 ஆண்டுகளுக்கும் மேலான இலக்கிய பணி சமூக, சமயப்பணிகளைக் கௌரவிக்கும் முகமாக 1999ஆம் ஆண்டின் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வித்துவான்'

# க. சொக்கலிங்கம் (சொக்கன்)

V

- சிறுகதை
- நாவல்
- கல்விப்பணி
- விமர்சனம்
- குழந்தை இலக்கியம்
- இலக்கணம்

1930 ஆம் ஆண்டு ஜுன் மாதம் யாழ்ப்பாணத்தில் பிறந்த க. சொக்கலிங்கம் 1956ல் இருந்து தமிழ் இலக்கிய உலகில் ஒரு கவிஞராக, சிறுகதை ஆசிரியராக, நாவலாசிரியராக, நாடக ஆசிரியராக, தமிழ் அறிஞராக, கட்டுரையாளராக, வானொலி எழுத்தாளராக அறிமுகமாகி தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துள்ளார். தமிழில் வித்துவான் பட்டம் பெற்ற பின் தனது 21வது வயதில் முதுமாணிப் பட்டத்திற்கான ஆய்வை முடித்தவர் ஒரு சாதாரண எளிமையான தோற்றமுடைய சொக்கன் கல்லூரி அதிபராகவும் இருந்து கல்விப்பணிக்கு முழுமையாகத் தன்னை அர்ப்பணித்திருந்த பொழுதிலும் தமிழ் இலக்கிய, இலக்கண முயற்சிகளில் தனது ஆற்றலை வெளிப்படுத்தியவர்.


இவரது 'செல்லும் வழி இருட்டு' நாவலாக வீரகேசரி பிரசுரமாக வெளிவந்தபோது பல்லாயிரக்கணக்கான வாசக நெஞ்சங்களைக் கவர்ந்தது. தமிழ் இலக்கியத் துறையில் எந்தளவுக்கு சிறுகதைகளையும், நாவல்களையும், படைத்துள்ளனரோ அதே போன்று 'போக்கிரி முயலாரின் சாகசங்கள்', போன்ற பல சிறுவர் இலக்கியங்களையும், 'ல, க, ர, ள, ழ, க, ர' பேதங்கள், 'தமிழ் இலக்கணம்' ஆகிய இலக்கண நூல்களையும் எழுதியுள்ளார். இவர் இதுவரை மூன்று நாவல்கள், நான்கு நாடகங்கள், ஆறு கட்டுரைத் தொகுப்புக்கள், பதினொரு சமய நூல்கள் இரண்டு சிறுகதைத் தொகுப்பு, இரண்டு இலக்கண நூல்கள் என பல்வேறு வடிவங்களில் நூல்களை வெளியிட்டு சாதனை படைத்துள்ளார்.

இவர் பாடசாலை அதிபராக இருந்த காலத்திலும் சமூகசேவைகளிலும், தன்னை இணைத்துக் கொண்டவர். முத்தமிழ் வெளியீட்டுக்கழக செயலாளராக அகில இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக்கிழார் மன்ற உப தலைவராகவும், திருமறை மன்றத் தலைவராகவும், கல்வி வெளியீட்டு பாடநூல் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் இருந்து பல்வேறு சமூகப்பணிகளையும் முன்னெடுத்துச் சென்றவர்.

காலத்திற்கும், சமூக மாற்றங்களுக்கும் ஏற்ப தம் சிந்தனையை பக்குவமாக்கி எழுத்து நடையை வளர்த்து எழுத்தின் பல துறைகளிலும் சமூக சேவையாலும் தன் பணியை கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொண்டு வரும் சொக்கனின் இலக்கிய சமூக பணியைக் கௌரவித்து 1999ஆம் ஆண்டுக்கான ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசூரி

**என். கே. பத்மநாதன்**

V

**❋ நாதஸ்வரக் கலை**

1931ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 19ம் திகதி அளவெட்டியில் கந்தசாமி பரிமளம் தம்பதிகளின் மகனாகப் பிறந்த என். கே. பத்மநாதனின் ஆரம்ப காலங்களில் அவரது தந்தையாரே ஞான குருவாக இருந்து நாதஸ்வர கலையைக் கற்றுக் கொடுத்தார்.

சிறு வயதிலிருந்தே அற்புதமான இந்தக் கலையை கற்றுத் தேர்ந்த என். கே. பத்மநாதன் தந்தை கந்தசாமியுடனும் பின்னர் மைத்துனருடனும் இணைந்து பல கச்சேரிகளைச் செய்து வந்தார்.

இக்கலையின் நுணுக்கங்களை மேலும் சிறப்பாக கற்றுக்கொள்வதற்காக தென்னிந்தியாவின் சீர்காழிக்குச் சென்று திருநாவுக்கரசுப்பிள்ளையிடம் நாதஸ்வரக்கலையை ஆர்வத்துடன் பயின்று தனது ஆற்றலையும் புலமையையும் மேம்படுத்திக் கொண்டார். பயிற்சியை முடித்து நாடுதிரும்பிய என். கே. பத்மநாதன் தன்னுடன் சிலரை இணைத்து தனக்கென ஒரு தனித்துவமான குழுவினை அமைத்து பல இடங்களிலும் கச்சேரியைச் செய்து வந்தார்.

1955ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த திருநாவுக்கரசுபிள்ளையிடம் இணைந்து இசைப்போட்டி ஒன்றில் பங்கு பற்றி தனது முதலாவது விருதினைப்பெற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது நாதஸ்வர இசைத்திறமை இலங்கை, இந்தியா போன்ற கீழைத்தேய நாடுகளில் மட்டுமன்றி ஐரோப்பாவிலும் நன்மதிப்பைப் பெற்றிருந்தது. இவரது ஆற்றலை உணர்ந்த இங்கிலாந்தின் வெஸ் மினிஸ்டர் பாராளுமன்றம் 1997 இல் இசைக்கச்சேரிக்கு அழைத்து கௌரவித்தது. அக்காலத்தில் கருப்பு இனத்தவரை இங்கிலாந்து பாராளுமன்றம் இவை போன்ற நிகழ்ச்சிகள் செய்ய அனுமதிக்காத போதும் இவரின் ஆற்றலை கௌரவிக்கும் முகமாக அனுமதி வழங்கியமை இலங்கைத் தமிழருக்குக் கிடைத்த ஒரு கௌரவமாகும். அந்த நிகழ்ச்சியில் 'கோட்டும் சூட்டும்' போட்டு மேலைத்தேய பாணியில் கலந்து கொள்ளாது தமிழ்ப் பண்பாட்டை பேணும் வகையில் வேட்டி சால்வையுடன் நடத்தி, தனக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்துக்கொண்டார்.



இவரது இசைத்துறை ஆற்றலைப் பாராட்டி 1980இல் இலங்கை அரசு 'கலாசூரி' விருதினை வழங்கி கௌரவித்தது. இவரது சீடர்களான என். பி. பாலகிருஷ்ணன், கேதீஸ்வரன் போன்ற நாதஸ்வரக் கலைஞர்கள் இன்று கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் தம் திறமைகளைக் காட்டி பெரும் புகழ் பெற்று வருவதை பெருமையுடன் நினைவு கூறுகிறார்.

கடந்த 53 வருடங்களாக நாதஸ்வர இசைத்துறையில் ஆற்றிவரும் அரும்பணிக்காக கலாசூரி என். கே. பதமநாதன் அவர்கள் கௌரவித்து 1999ஆம் ஆண்டுக்கான வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் விருது வழங்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மணி வே. சுப்பிரமணியம்

தமிழும், சைவமும் கூடவே வீரமும் தழைத்தோங்க சுதந்திர வீரனும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு விட்டுக்கொடுத்தும் பணியாத பண்டாரவன்னியன் ஆட்சிசெய்த வடக்கின் வீரம் செறிந்த முல்லைத்தீவு மாவட்டம், தமிழுக்கு தந்த கலைஞரும், கல்விமானும்தான் 'முல்லைமணி' என்ற பெயரில் இலக்கிய சாதனை படைத்துவரும் வே. சுப்பிரமணியம் அவர்கள்

1933ஆம் ஆண்டு மே மாதம் 3ஆம் திகதி அடங்காப்பற்று என்று அழைக்கப்படும் முல்லைத்தீவில் உள்ள முள்ளியவளையில் பிறந்த வே. சுப்பிரமணியம் அவர்கள் யாழ்ப்பாணம் திருநெல்வேலி பண்டிதகலாசாலையில் தமிழைக் கற்றுணர்ந்து பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர். விஞ்ஞானப் பயிற்சிக்கெனப் போன முல்லைமணி தமிழ் கற்ற கல்விமாணியாக கல்வி உலகில் தடம் பதித்துக் கொண்டவர்.

தமிழ் இலக்கியப் பரப்பில் சாதனைகள் படைத்து வரும் திரு வே. சுப்பிரமணியம் முல்லைமணி என்ற புனைப்பெயரில் நாடகம், சிறுகதை, நாவல், கவிதை, கல்வியல் இலக்கியம் ஆகிய பல்வேறு துறைகளில் ஆழக்கால் பதித்து வருபவர். மட்டக்களப்பு, கோப்பாய், ஆசிரிய கலாசாலைகளில் விரிவுரையாளராகவும் முல்லைத்தீவு மாவட்டக் கல்விப்பணிப்பாளராகவும் இருந்து கல்வித்துறையில் சேவையாற்றி ஓய்வு பெற்ற பின் இன்று முழு நேரமும் இலக்கிய பணியில் தன்னை ஈடுபடுத்திவருபவர்.

முல்லைமணி அவர்களின் இலக்கிய, கல்வி, தமிழ் ஆய்வுப்பணிகளைக் கௌரவித்து 'கலைஞர் திலகம்' 'தமிழ் மணி', ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன.

- சிறுகதை
- நாவல்
- சமூகப்பணி
- சமயப்பணி
- கல்விப்பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது 'பண்டார வன்னியன்' நாடகம் இலங்கை கலைக்கழக பரிசு பெற்றதுடன் இரண்டு பதிப்புக்களைக் கண்ட வெற்றிப்படைப்பாகும். 'அரசிகள் அழுவதில்லை' என்ற சிறுகதைத் தொகுப்பு தேசிய சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற சிறந்த மண்வாசனை கமழும் சிறுகதைத் தொகுப்பு. நாட்டார் பாடல் துறையில் ஈடுபாடுடைய இவரது பன்னிரண்டு சொற்பொழிவுகள் 'மக்கள் கலை' என்னும் தலைப்பில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டு பல்லாயிரக்கணக்கான நேயர்களின் பாராட்டைப் பெற்றது. வீரகேசரி பத்திரிகை நடத்திய பிரதேச நாவல் போட்டியில் பரிசு பெற்ற 'மல்லிகை வனம்' என்ற நாவலை தென்னிந்திய சோழன் பதிப்பகம் நூலாக வெளியிட்டது.



இவற்றைவிட பல்சுவை இலக்கியமும் கலந்த "இலக்கிய பார்வை" நூலையும், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் பாமாலை, நெடுங்கேணி வில்வையடிப் பிள்ளையார் பாமாலை, காவத்தை நிலகாமம் முத்துமாரியம்மன் திருவூஞ்சல் என்ற சமய நூல்களையும் "வன்னியர் திலகம்" என்ற வரலாற்று நாவலையும், தமிழ் இலக்கிய உலகிற்கு அளித்துள்ளார்.

கடந்த 40 வருடங்களாக இலக்கியத் துறையிலும் கல்வித் துறையிலும் ஆற்றி வரும் பணிக்காக திரு முல்லைமணி வே. சுப்பிரமணியம் அவர்களுக்கு 1999ஆம் ஆண்டுக்கான வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் விருது வழங்கி கௌரவிக் கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்
## சி. தில்லைநாதன்

V

* கல்வித்துறை
* பத்திரிகைத் துறை
* விமர்சனம்
* நாடகம்
* இலக்கிய கட்டுரை

1937ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி சுன்னாகத்தில் பிறந்த சி. தில்லைநாதன் தனது ஆரம்பக் கல்வியை சுண்ணாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் முடித்து பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு கலைப்பீட மாணவனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

1950களின் இறுதியிலும், 1960களின் தொடக்கத்திலும் பல்கலைக்கழக மாணவனாக இருந்த போதும் கவிஞராகவும் சிறு கதை ஆசிரியராகவும், நாடக ஆசிரியராகவும். தன் ஆற்றல்களை வெளிக்காட்டினார். தமிழ்ச்சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியிலும், இந்து மாணவர் சங்கம் நடத்திய கட்டுரைப்போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்று பல் கலைக்கழகத்தில் தனி இடம் பிடித்துக்கொண்டார். பேராதனையில் மாணவராக இருந்த பொழுது பேராதனைக் கவிதைகள் சஞ்சிகையின் ஆசிரியராகவும், பின்னர் விரிவுரையாளராகிய பொழுது பல்கலைக்கழகத்தின் சஞ்சிகையான 'Sri Lanka Journal of the Humanities, என்ற சஞ்சிகையின் 1980-1991 காலப் பகுதிக்கான ஆசிரியராகவும் பணியாற்றினார்.

பட்டப்படிப்பை முடித்து வெளியேறிய சி. தில்லைநாதன் 'தினகரன்' பத்திரிகையின் 'விவரணப்பகுதி' (Features) பொறுப்பாசிரியராக 1961 - 1964 காலப்பகுதியிலும் பின்னர் ஒப்சேவர் பத்திரிகையில் தமிழ் விடயங்கள் தொடர்பான கட்டுரைகளுக்கும் பொறுப்பான உதவி ஆசிரியராகவும் பதவி புரிந்து ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் விமர்சனப்பாங்கான கட்டுரைகளுக்கு தளம் அமைத்துக் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1964இல் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட சி. தில்லைநாதன் 1965இல் பேராதனைப்பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகி பல நூற்றுக்கணக்கான தமிழ் பட்டதாரிகளை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தார்.

இவர் ஒரு சிறந்த நாடக விற்பனர், என்பதற்குச் சான்றாக விளங்குவது அவரால் தயாரித்து மேடையேற்றப்பட்ட 'தகுதி' 'மானிடம் என்பது புல்லோ' என்ற நாடகங்களாகும். தமிழ் பேராசிரியரான பின்பு, விமர்சனத் துறையில் அதிகளவு ஈடுபாடு காட்டிய சி. தில்லைநாதன் ஈழத்து தினசரிகள் சஞ்சிகைகளிலும் தென்னிந்தியப் பத்திரிகைகளிலும் பல நூற்றுக்கணக்கான சமய இலக்கிய விமர்சன கட்டுரைகளை எழுதியதுடன் மாணவர்களுக்கு சிறப்பான விமர்சனவியல் தொடர்பான விரிவுரைகளையும் எடுத்து வந்தார்.

இவரது 'வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை' 'இலக்கியமும் சமுதாயமும்' என்ற நூல்கள் இவரது அகன்ற இலக்கிய நோக்கை வெளிப்படுத்தும் நூல்களாகும்.

1995இல் சென்னை பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்று இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் அண்மைக்கால போக்குகள் பற்றிய கருத்துரை வழங்கினார்.

1993இல் இந்து கலாசார இராஜாங்க அமைச்சின் 'இலக்கிய செம்மல்' விருதும் 1994 ஜனாதிபதியின் 'கலாகீர்த்தி' தேசிய விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சுமார் 40 ஆண்டு காலமாக கல்வித்துறைக்கும் இலக்கியத் துறைக்கும் ஆற்றிவரும் சேவைக்காக பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்களுக்கு 1999ஆம் ஆண்டுக்கான வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் விருது வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய கலாநிதி

## இ. முருகையன்

V

❋ அறிவியல் இலக்கியம்

❋ கவிதை

❋ கட்டுரைகள்

❋ சஞ்சிகை

❋ கல்வித்துறை

தமிழில் விஞ்ஞானக் கல்வியைக் கற்பிக்க முடியுமா என்ற சர்ச்சை எழுந்த போது புதிய தமிழ்க்கலைச் சொல்லாக்கங்களைப் பயன்படுத்தி அறிவொளி என்ற அறிவியல் மாசிகையை வெளியிடுவதில் முன்னின்று உழைத்தவர் கவிஞர் இ.முருகையன் அவர்கள் அறிவொளி மூலம் ஈழத்தமிழ் இலக்கிய உலகில் ஒரு புதிய வடிவத்தை அறிவியலின் ஊடாகப்புகுத்தியவர்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக கவிதைத் துறையிலும், அறிவியல் இலக்கியத்துறையிலும் பல வெளியீடுகளை மேற்கொண்ட இ. முருகையன் ஒரு விஞ்ஞான பட்டதாரி ஆவார்.

'புதுமை' என்ற கவிச்சஞ்சிகையை வெளியிட்டு கவிதை இலக்கியத்தை ஈழத்தில் வளர்த்தெடுக்க உழைத்த முருகையன் பல நூல்களை வெளியிட்ட போதும் 'இன்றைய உலகில் இலக்கியம்', 'ஒரு சில விதிசெய்வோம்' ஆகிய நூல்கள் மிகச் சிறப்பு வாய்ந்தவை. இவர் கவிதை நாடகங்கள் பலவற்றை தானே எழுதி நடித்தும் காட்டி ஈழத்துத் தமிழ் இலக்கியத்துக்கு புது மெருகூட்டியவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட பதிவாளராக பணிபுரிந்த காலத்தில் தமிழ், அறிவியல், இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர். இவரது இலக்கியப் பணிக்காக அண்மையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அறிவியல் இலக்கியம், நாடக விமர்சனம், கட்டுரைத்துறைகளில் தமிழ் மொழியின்செம்மைக்கு உழைத்துவரும் இ. முருகையனை கௌரவிக்கும் முகமாக 1999ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வி. கிருஷ்ணபிள்ளை

(திமிலைத்துமிலன்)

V

- சிறுகதை
- நாவல்
- கவிதை
- கல்வித்துறை
- நாட்டார்இலக்கியம்
- ஓவியம்

"திமிலைத்துமிலன்" என்ற புனைப்பெயரில் கடந்து 50 வருடங்களுக்கு மேலாக இலக்கியப் பணி புரிந்து வரும் வி. கிருஷ்ணபிள்ளை அவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

"கவிமணி" என்ற விருதைப் பெற்று பலராலும் பாராட்டப்பட்டுவரும் இவர் கவிதைக்காகப் பல பரிசுகளையும், விருதுகளையும் பெற்றுள்ளார். கவிதைத் துறையுடன் சிறுகதை , நாவல், நாட்டார் இலக்கியம், ஓவியக்கலை மட்டக்களப்பு கிராமியக் கூத்துக்கலை என்பவற்றிலும் ஆற்றல் நிறைந்துள்ளது பெருமளவு ஆக்கங்களையும் படைத்துள்ளார்.

ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராக இருந்த போது, நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கு, கல்வியுடன் தமிழ் இலக்கிய தாகத்தை ஏற்படுத்திய திமிலைத்துமிலனின் நூல்களுள், எல்லாம் "எங்கள் தாயகம்" என்ற கவிதை தொகுதியும் "மஞ்சு நீ மழை முகில் அல்ல" நாவலும் "கொய்யாக்கனிகள்" நாவலும் மிகச் சிறந்த படைப்புக்கள் எனப் பாராட்டப்பட்டவை.

அவரது கவிதைத் தொகுப்பில் "நீரறை மகளிர்" என்ற கவிதை மிக அற்புதமாக உணர்வு பூர்வமாகப் படைக்கப்பட்டது. இக் கவிதை 1997இன் வடக்கு கிழக்கு மாகாண இலக்கியப் போட்டியில் முதலிடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திமிலைத்துமிலன் ஆசிரியர் விரிவுரையாளர் சேவையில் இருந்து இளைப்பாறிய பின்னரும் கூட, மட்டக்களப்பு, வின்சன்ற் மகளிர் கல்லூரியில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளுக்கு "கவிதை இலக்கியம்"பற்றிய வகுப்பக்களை நடத்திக் கொண்டிருப்பது அவரது இலக்கிய தாகத்தை எடுத்துக் காட்டுகின்றது. மட்டக்களப்பில் இயங்கும் "கவிமணி நூல் வெளியீட்டு மன்றம்" என்ற நிறுவனம் அவரது நூல்களை வெளியிட்டு வருகின்றது.

கல்வித்துறையிலும், தமிழ் இலக்கியத் துறையிலும் 50 வருடங்களுக்கு மேலாகப் பணி புரிந்து வரும் கவிமணி வி. கிருஷ்ணபிள்ளை அவர்களைக் கௌரவிக்குமுகமாக "1999ஆம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது" வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைக்குயில்

# மீரா உம்மா

V

※ கவிதை

※ இசைப்பாடல்

அகமதுலெப்பை விசுவா உம்மா தம்பதியினருக்கு மகளாக இறக்காமத்தில் பிறந்தவர் தான் மீரா உம்மா. பிறக்கும் போதே இரண்டு கண்பார்வையும் இழந்த, இவர் தனது தகப்பனின் இறப்பிற்குப் பிறகு தாயோடு அக்கரைப்பற்றிற்கு வந்து வாழ்ந்து வந்தார்.


ஊனக்கண் இல்லாவிட்டாலும் இறைவன் இவருக்கு ஞானக் கண்ணைக் கொடுத்திருந்தான் . அதனால் சிறுவயது முதல் இயற்கையாக கவிபாடும் வல்லமையைப் பெற்றிருந்தார். கவி வளத்தோடு இனிமையான குரல் வளத்தினையும் பெற்றிருந்த மீரா உம்மா அவர்கள் சிறுவயது முதல் மக்கள் மத்தியிலே செல்வாக்குப் பெற்றிருந்தார்.

13 வயதில் அக்கரைப்பற்று புதுப்பள்ளியடியில் கொண்டாடப்பட்ட மீலாத் விழாவில் இவரது முதல் அரங்கேற்றம் நடைபெற்றது. அதே மேடையில் வைத்து சிறுமி மீரா உம்மாவுக்கு "அருட்கவி " எனப் பட்டம் சூட்டிக் கௌரவித்தனர். அன்றிலிருந்து பகிரங்க மேடைகளிலும் வானொலியிலும் பாடத்தொடங்கிய அவர் தற்போது 50 வயதிற்கு மேலாகியும் பாடிக்கொண்டே இருக்கிறார்.

1975ஆம் ஆண்டு இவரது முதல் பாடல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப் பட்டது. 1991ஆம் ஆண்டு முஸ்லிம் கலாசார அமைச்சு நடத்திய "வாழ்வோனை வாழ்த்துவோம் "நிகழ்வின் போது மீரா உம்மாவுக்கு "சௌதுல் அந்தலீப்" (இசைக்குயில்) எனப் பட்டமளித்து கௌரவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறைஅமைச்சு எனக்கு மாதா மாதம் இரண்டாயிரம் ரூபாய் பணம் தந்து என்னை ஆதரிக்கிறார்களே இவற்றையெல்லாம் நான் மறந்திட முடியுமா?'" உன்று உணர்ச்சி ததும்பக் கூறியபடியே,



"கண்ணை மறைத்தான்
கவிதை தந்தான்
கருணை றஹுசமான்
என்னைக் கௌரவித்தான்

அல்லாஉற் தந்த பட்டம் குருடி
அரசாங்கம் தந்த பட்டம் சௌதுல் அந்தலீப்
ஊர் மக்கள் தந்த பட்டம் அருட்கவி
இந்த உண்மைக்கு நன்றி கூறும் நற்கவி."

எனக் கவிதையிலேயே நன்றி சொன்னார், அந்தக் கவி மீரா உம்மா அவர்கள்.

ஆம் !......கண் பார்வையை இழந்த நிலையிலும் இசைத்துறையில் சாதனை படைத்துவரும் சௌதுல் அந்தலீப் மீரா உம்மா அவர்கள் இசைத்துறையில் ஆற்றிவரும் அரும்பெரும் சேவைக்காக "1999ஆம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது" வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்தப்படுவோர்

## இலக்கிய விருது பெறுவோர் – 1997



★ நாவல் இலக்கியம்: "தர்மங்களாகும் தவறுகள்"
**- ஜனாப் அ. ஸ. அப்துல் சமது**

★ சிறுகதை இலக்கியம்: "வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்"
**- திருமதி கோகிலா மகேந்திரன்**

★ கவிதை இலக்கியம்: "நெஞ்சின் நெருடல்கள்"
**- அமரர் எஸ். பற்குணம்**

★ சிறுவர்இலக்கியம்: "பாட்டுப்பாடுவோம்"
**- திரு. த. துரைசிங்கம்**

★ சமய இலக்கயிம்: "சௌந்தர்யலகரி"
**- திரு. ந. வீரமணி ஐயர்**

★ ஆய்வு இலக்கியம்: "இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள்"
**- கலாநிதி க. அருணாசலம்**

★ நாடக இலக்கியம்: "மங்கையராய்ப் பிறப்பதற்கே"
**- திரு. வெ. தவராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பல்துறை இலக்கியம்



கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்கள்
- திரு. எஸ் முத்து மீரான்

இலங்கையில் தொலைக்காட்சி
- திரு. அருணா செல்லத்துரை

பாலர் கல்வி
- திரு. சபா ஜெயராஜா

தற்கால யாழ்ப்பாணத்து ஓவியம்
- பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா

இலங்கைத் தமிழ் இலக்கியம்
- பேராசிரியர் எஸ். தில்லைநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

1999 ஆம் ஆண்டின் வடக்கு - கிழக்கு மாகாண இலக்கியப் பெருவிழா கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் தமிழுக்கு தொண்டு செய்வோர் பாராட்டப்படுவது ஒரு வரலாற்றுச் சிறப்பாகும்.



ஆம்...சோழப் பேரரசிலும், சேரன் செங்குட்டுவன் காலத்திலும், பாண்டியப் பேரரசின் பூம்புகார் விழாவிலும் இவை போன்ற விழாக்கள் நடத்தப்பட்டுள்ளதாக இலக்கிய வரலாறுகள் மூலம் அறிந்த எமக்கு, இன்று அந்தப் புனிதமான தமிழ் பெருவிழாவைக் கண்ணால் கண்டுகளிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தி ஒரு தூரப் பார்வையில் எம்மைச் சிந்திக்க வைத்த எமது கல்விச் செயலர் திரு. சுந்தரம் டிவகலாலா எமது இனத்தின் நன்றிக்குரிய பெருமகன்......!

இந்த நூலை வெளியிட வேண்டும் என்ற அவாவில் அனைத்து வளங்களையும் ஏற்படுத்தி தந்தவர் அவரே!

இதில் வாழ்த்தப்படும் அறிஞர் பெருமக்கள் தொடர்பான தகவல்களைத் தந்தவர்களுக்கும், குறுகிய நாட்களில் அழகாக அச்சேற்றித் தந்த ஸ்ரீ கணேச அச்சகத்தினருக்கு எமது நன்றிகள்!

விழாக் குழுசார்பில்

**ந. அனந்தராஜ்**

(உதவிக் கல்விப்பணிப்பாளர்)

திரு/ஸ்ரீ கணேச அச்சகம்
☎ 026 - 22617

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org